**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்**

**அசல் வழக்கு எண். 28/2013**

DW1 – திரு. முரளி நாள். 17.08.2023

(1969 ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.எஸ்.வாசுதேவன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

1. வாதிகள் குடியிருக்கும் வீடுகளை ஒட்டிதான் அவர்களுடைய நிலங்கள் உள்ளது என்றால் சரிதான். எங்களது பகுதியில் நஞ்சை, புஞ்சை நிலங்களில் விவசாயம் செய்து பின் அறுவடை செய்த பிறகு பணப்பயிர் என்று சொல்லக்கூடிய மிளகாய், நெல் போன்ற நவதானியங்கள் பயிரிடுவார்கள் என்றால் பயிரிமாட்டார்கள் **(சாட்சி மேற்படி கேள்விக்கு எப்போதாவது பணப்பயிர்கள் விவசாயம் செய்வார்கள் என மாற்றி பதில் அறித்தார்.)**

2. எங்கள் வீட்டை ஒட்டியுள்ள இடங்களில் காய்கறி தோட்டங்கள் அமைப்போம் என்றால் அவ்வாறு அமைக்க மாட்டோம் நெல் மட்டும் பயிரிடுவோம். வாதிகள் விவசாயம் செய்யும் நிலங்கள் எத்தனை ஏக்கர் இருக்கும் என்றால் நஞ்சை நிலங்கள் மட்டும் 21 ஏக்கர் உள்ளது. எங்கள் குடியிருப்பை சேர்ந்தவர்கள் எவ்வளவு இடத்தில் விவசாயம் செய்வோம் என்றால் இடத்தின் அளவு சுமார் 300 ஏக்கர் நஞ்சை இருக்கும்.

3. கண்மாயில் இருந்து தண்ணீர் வெளியேறக்கூடிய பகுதி வழியாக எந்த அளவுக்கு தண்ணீர் வெளியேறுமோ அந்த அளவுக்கு தண்ணீரை பாய்ச்சி விட்டு

தண்ணீர் வராத போது மோட்டார் வைத்து தண்ணீர் எடுப்போமா என்றால் சரியல்ல கண்மாயில் இருந்து தண்ணீர் தானாக வருவதை மட்டும் பயன்படுத்தி விட்டு பின்னர் ஆடு மாடுகளுக்கு விட்டுவிடுவோம். பொதுவாக விவசாய நிலங்களுக்கு, மடைகளுக்கு மற்றும் வாய்காலுக்கு பெயர் வைத்து அழைப்பது வழக்கம் என்றால் சில வாய்க்காலுக்கு பெயர் உண்டு சில வாய்காலுக்கு பெயர் இல்லை. கண்மாயின் தென்புறத்தில் உள்ள மடைக்கு பெயர் என்னவென்றால் துலுக்கன் செய் மடை என அழைப்பார்கள்.

4. மேற்படி துலுக்கன் செய் மடை வழியாக செல்லக்கூடிய தண்ணீர் எத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் தோராயமாக 70 ஏக்கர் நிலங்களுக்கு பாய்ச்சப்படுகிறது. மேற்படி மடை பாசானத்தில் வாதிகளுக்கு நிலங்கள் இல்லை என்றால் சரிதான். மேற்படி துலுக்கன்செய் மடைக்கு வடபுறத்தில் உள்ள மடையின் பெயர் என்னவென்றால் நெடுங்கன் மடை ஆகும். மேற்படி நெடுங்கன் மடை வழியாக எத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சுவார்கள் என்றால் அதைபற்றி சரியாக தெரியாது.

5. மேற்படி நெடுங்கன் மடைக்கு வடக்கே உள்ள மடைக்கு என்ன பெயர் என்றால் மேட்டுமடை ஆகும். மேற்படி மேட்டுமடை வழியாக எவ்வளவு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் மேலே சொன்னவாறு அளவுகள் சரியாக தெரியாது. மேற்படி மேட்டுமடைக்கு வடக்கே உள்ள மடைக்கு என்ன பெயர் என்றால் அதற்கும் மேட்டு மடை என்றுதான் பெயர். மேற்படி மற்றொரு மேட்டுமடை வழியாக எவ்வளவு ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் மேலே சொன்னவாறு அளவுகள் சரியாக தெரியாது.

6. மேற்படி மற்றொரு மேட்டுமடைக்கு வடக்கில் உள்ள மடையின் பெயர் என்னவென்றால் ஆலமடை ஆகும். மேற்படி ஆலமடை வழியாக எத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் அதைபற்றி எனக்கு சரியாக

தெரியாது. மேற்படி ஆலமடைக்கு வடக்கில் உள்ள மடையின் பெயர் என்னவென்றால் கரிசல்மடை ஆகும். மேற்படி கரிசல் மடை வழியாக எத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் அதைபற்றி எனக்கு சரியாக தெரியாது. மேற்படி கரிசல்மடைக்கு வடக்கில் உள்ள மடையின் பெயர் என்னவென்றால் குடியிருப்புமடை ஆகும். மேற்படி குடியிருப்புமடை வழியாக எத்தனை ஏக்கருக்கு தண்ணீர் பாய்ச்சப்படுகிறது என்றால் அதைபற்றி எனக்கு சரியாக தெரியாது.

7. மேற்படி குடியிருப்பு மடை எந்த குடியிருப்பு மடை என்றால் வாதிகள் குடியிருப்பு மடை ஆகும். மேற்படி குடியிருப்புமடைக்கு வடக்கில் உள்ள மடையின் பெயர் என்னவென்றால் மடை எதுவும் இல்லை. குடியிருப்பு மடைக்கு வடபுறம் மடை உள்ளது என்று இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் மேற்படி குடியிருப்பு மடைக்கு வடபுறம் மடை எதுவும் இல்லை மேலும் 1995ம் ஆண்டு மேற்படி இடத்தில் வாதிகள் தூம்பு வைத்தார்கள் அதை அப்போதே வட்டாட்சியர் தலைமையில் சமாதான கூட்டம் மூலம் தடுத்து நிறுத்திவிட்டார்கள்.

8. மேற்படி குடியிருப்பு மடைக்கு வடக்கே தூம்பு தற்போது வரை இருந்து வருகிறது என்றால் சரியல்ல மேற்படி சமாதான கூட்டத்தின் அடிப்படையில் ஜேசிபி இயந்திரம் கொண்டு 1995ல் வைக்கப்பட்ட தூம்பை அப்போதே உடைத்து புதைத்து விட்டனர் தற்போது அது கரையாக இருந்து வருகிறது. எனது எதிர்வழக்குரையில் சமாதான கூட்டத்தின் அடிப்படையில் ஜேசிபி இயந்திரம் கொண்டு 1995ல் வைக்கப்பட்ட தூம்பை அப்போதே உடைத்து புதைத்து விட்டனர் என்று காட்டவில்லை என்று சொன்னால் அதைப்பற்றி எனக்கு தெரியவில்லை ஒருபொழுது காட்டாமல் இருந்து இருந்தால் அது தவறு.

9. எதிர்வழக்குரை தாக்கல் செய்வதற்கு வழக்கறிஞரிடம் விவரங்கள்

சொன்னது யார் என்றால் 1ம் பிரதிவாதி சொன்னார் நான் உடன் சென்றேன். தாவா சொத்தை நீதிமன்ற வழக்கறிஞர் ஆய்வு செய்தார் என்றால் சரிதான். மேற்படி நீதிமன்ற ஆணையர் தாக்கல் செய்த அறிக்கை மற்றும் வரைபடத்தை பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை. மேற்படி நீதிமன்ற ஆணையர் என்ன அறிக்கை தாக்கல் செய்துள்ளார் என்ற விவரத்தை தெரிந்து கொண்டேனா என்றால் தெரிந்து கொள்ளவில்லை. மேற்படி நீதிமன்ற ஆணையர் தாவா சொத்தை பார்வையிடும் போது மேற்படி இடத்தை தோண்டி பார்த்து தூம்பு இருக்கும் விவரத்தை கண்டறிந்தார் என்றால் சரியல்ல தாவா சொத்தை தோண்டி பார்க்கவில்லை நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முன்னர் வாதிகள் அவர்கள் வீட்டில் இருந்து உடைந்த தூம்புகளை எடுத்து வந்து தாவா சொத்தில் போட்டு வைத்திருந்தனர்.

10. தாவா சொத்தில் உடைந்த நிலையில் இருந்து தூம்புகள் முன்னர் இருந்தது என்றும் நீதிமன்ற ஆணையர் வருவதற்கு முன்னர் வாதிகள் அவர்கள் வீட்டில் இருந்து உடைந்த தூம்புகளை எடுத்து வந்து தாவா சொத்தில் போட்டு வைத்திருந்தனர் என்று பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கு கிழக்கே வாய்க்கால் உள்ளது என்றால் வாதிகளுடைய நிலத்தில் இருந்து கழிவு நிர் செல்லக்கூடிய வாய்க்கால் உள்ளது. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள வாய்க்காலானது வாதிகளுடைய நிலத்தில் இருந்து கழிவு நிர் செல்லக்கூடிய வாய்க்கால் இல்லை என்றும் அது அவர்கள் நிலத்திற்கு தண்ணீர் பாய்ச்சக்கூடிய வாய்க்கால் என்றால் சரியல்ல. நீதிமன்ற ஆணையர் அறிக்கைக்கு ஆட்சேபனை எங்கள் தரப்பில் தாக்கல் செய்துள்ளது பற்றி எனக்கு தெரியுமா என்றால் அதைபற்றி எனக்கு எதுவும் தெரியாது.

11. மேற்படி ஆட்சேபனை பாரா 9ல் தாவா இடத்தில் சுமார் 4 அடி ஆழத்தில் வாதிகள் தரப்பில் தோண்டி பார்த்தும் குழாய் தென்படாததால் பின்பு ஜேசிபி இயந்திரம் கொண்டுவரப்பட்டு மீண்டும் 2 அடி தோண்டப்பட்ட பின்பு மிக

ஆழத்தில் சிமெண்ட் குழாய் இருந்தது என்றும், மேலும் வாதிகள் கூறியுள்ளதுபோல் தூம்பாக இருந்தாலும் மேற்படி தூம்பு சுமார் 20 வருடம் காலமாக பயன்படாமல் இருந்து வருகிறது என்று ஆட்சேபனை தெரிவித்து விட்டு தற்போது தெரியவில்லை என பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆணையர் பார்வையிடும் போது நான் உடன் இருந்தேனா என்றால் உடன் இருந்தேன்.

12. மேற்படி ஆட்சேபனையில் சமாதான கூட்டத்தின் அடிப்படையில் ஜேசிபி இயந்திரம் கொண்டு 1995ல் வைக்கப்பட்ட தூம்பை அப்போதே உடைத்து புதைத்து விட்டனர் என்ற விவரத்தை சொல்லவில்லை என்று சொன்னால் மேற்படி ஆட்சேபனை பற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தில் ஏககாலத்தில் தூம்பு உள்ளது எங்களது ஆட்சேபனையில் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் முன்பு சொன்னதுபோல் ஆட்சேபனை பற்றி எனக்கு தெரியாது. மேற்படி தாவா சொத்தில் உள்ள தூம்பு ஏககாலத்தில் கண்மாய் ஏற்படுத்தும்போது வாதிகள் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்காக போடப்பட்ட தூம்பு என்றால் சரியல்ல.

13. தாவா சொத்து உள்ள கண்மாய் எத்தனை முறை தூர் வாரப்பட்டது என்றால் கண்மாயில் தாவா சொத்து இல்லை எங்கள் கிராமத்தில் உள்ள கருங்கடி கண்மாய் எனக்கு தெரிந்து 3 முறை தூர் வாரப்பட்டுள்ளது. தாவா சொத்து எங்கு உள்ளது என்றால் 1வது மடைக்கு வடக்கு பக்கம் உள்ளது. கண்மாய் தூர்வாரப்பட்டால் கரையை உயர்த்தி கொண்டே வருவார்கள் என்றால் சரிதான். மேற்படி கண்மாயில் 3 முறை தூர் வாரப்பட்டதால் கரைகளின் உயரம் உயர்ந்து உள்ளது என்றால் சரிதான். மேற்படி கண்மாயின் உயரம் உயர்ந்து உள்ளதால் தூம்பு கரைக்கு அடிமட்டத்தில் உள்ளது என்றால் சரியல்ல முன்னர் கூறியதுபோல் 1995ம் ஆண்டு உடைக்கப்பட்டது.

14. மேற்படி கண்மாயில் உள்ள புதுமடைகள் எப்போது கட்டினார்கள் என்றால்

கண்மாய் கட்டும்போது 7 மடைகள் கட்டிவிட்டனர் புதிதாக எதுவும் கட்டவில்லை. மேற்படி எங்கள் கண்மாயில் நவீன முறையில் மடைகள் கட்டவில்லையா என்றால் காலத்திற்கு ஏற்ப தொடர்ந்து கட்டி கொண்டிருக்கிறார்கள். மேற்படி கண்மாயில் உள்ள மடைகள் வழியாக தண்ணீர் வெளியேறுவதற்கு மடையில் எத்தனை வழிகள் உள்ளது என்றால் ஒவ்வொரு மடையிலும் ஒவ்வொரு வழி உள்ளது.

15. நான் கருங்குடியில் வசித்து வருகிறேன். நான் கருங்குடி கிராமத்தில் நிரந்தரமாக குடியிருந்து வராததால்தான் ஒவ்வொரு மடை மூலமாக எத்தனை ஏக்கர் நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சக்கூடிய விவரம் எனக்கு தெரியவில்லை என்றால் சரியல்ல. பொதுவாக சமாதான கூட்டம் நடந்தால் யார் யார் முன்னிலையில் எந்த தேதியில் நடைபெற்றது என்றவிவரங்களை தொகுத்து எழுதி வைப்பார்கள் என்றால் சரிதான். அவ்வாறு சமாதானக் கூட்டம் நடைபெற்றால் சமாதான கூட்டத்தின் முடிவுகளை சம்பந்தப்பட்ட நபர்களுக்கு பிரதிகளையும் சமாதானக் கூட்டத்தை நடத்திய அதிகாரிகளின் அலுவலகத்தில் ஆவணமாக வைக்கப்படும் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. எனது தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள நிரூபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் கூறியுள்ளது என்பது எழுத படிக்க தெரியாததால் எனக்கு தெரியாது என்றால் சரிதான்.

16. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் எந்த இடத்தில் யார் முன்னிலையில் எந்த தேதியில் நடத்தப்பட்டது என்ற விவரங்கள் இல்லை என்று சொன்னால் மேற்படி விவரங்கள் அந்த ஆவணத்தில் உள்ளது. மேற்படி விவரங்கள் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் இல்லை என்றும் வழக்கிற்காக இல்லை என்று சொன்னால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணம் என்பது நகல் என்றால் அதைபற்றி எனக்கு தெரியாது. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசலை பற்றி எங்களது எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்று சொன்னால் அதைபற்றி எனக்கு

தெரியாது. மேற்படி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தின் அசல் எனது கைவசம் இல்லை என்று சொன்னால் சரிதான்.

17. பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை எனது வழக்கறிஞரிடம் கொடுத்தது யார் என்றால் சரியாக தெரியவில்லை நானாக இருக்கலாம் அல்லது 1ம் பிரதிவாதியாக கூட இருக்கலாம். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் அரசு அதிகாரிகள் கையொப்பத்திற்கு கீழ் முத்திரை இல்லை என்றால் சரிதான். 1995ம் ஆண்டு சமாதான கூட்டம் நடக்கவில்லை என்றும் அவ்வாறு நடந்ததாக கூறுவது பொய் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 26.12.2002 தேதி சமாதான கூட்டம் நடந்ததாக சொல்லப்படும் ஆவணத்தின் அசல் யாரிடம் உள்ளது என்றால் சரியாக தெரியவில்லை வழக்கறிஞரிடம் இருக்கலாம். மேற்படி பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எங்கு சமாதான கூட்டம் நடந்தது என்று குறிப்பிட்டு எழுதப்படவில்லை என்றால் சரிதான் எங்கு நடந்தது என்று எனக்கு தெரியும்.

18. தாவா சொத்தில் உள்ள தூம்பு சம்பந்தமாக பிரச்சனை ஏற்பட்டு அதன் அடிப்படையில் சமாதான கூட்டம் நடந்ததாக பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். எனது தரப்பில் 1ம் பிரதிவாதியை விசாரிக்க தயாராக உள்ளோமா என்றால் 1ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் உள்ளார். மேற்படி 1ம் பிரதிவாதி மனநிலை பாதிக்கப்பட்ட நிலையில் எவ்வளவு காலமாக இருந்து வருகிறார் என்றால் ஒரு வருட காலமாக இருந்து வருகிறார். மேற்படி 1ம் பிரதிவாதி மனநிலை பாதிப்படைந்துள்ளதாக வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

19. கண்மாயில் தண்ணீர் குறைவாக இருக்கும்போது எல்லோரும் பயன்அடைய வேண்டும் என்பதற்காக பகிர்ந்து தரப்படும் என்றால் நஞ்சை நிலங்களுக்கு மட்டும் அவ்வாறு பகிர்ந்து தரப்படும். நஞ்சை இடம் இல்லாத நபருக்கு கண்மாயில் இருந்து தண்ணீர் பகிர்ந்து தரப்படுமா என்றால்

அதைப்பற்றி எனக்கு தெரியாது எங்கள் ஊரில் அனைவரும் நஞ்சை நிலம் வைத்துள்ளனர். வாதிகளால் போடப்பட்ட தூம்பை அப்புறப்படுத்த நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கினேனா என்றால் நீதிமன்றத்தில் வாங்கவில்லை வருவாய் துறையில் உத்தரவு வாங்கி உள்ளோம். மேற்படி வருவாய் துறையில் இருந்து பெறப்பட்ட உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்துள்ளோம்.

20. மேற்படி வருவாய் துறையில் வாதிகள் தூம்புகளை எடுக்க மறுக்கினர் என மனு ஏதேனும் கொடுக்கப்பட்டதா என்றால் வருவாய் துறையில் இருந்து தூம்பு உடைத்து பயன்பாடு இல்லாத வகையில் புதைக்கப்பட்டது. மேற்படி தூம்பை எந்த வருடம் வருவாய் துறையினர் உடைத்தார்கள் என்றால் 1995ம் வருடம் உடைத்தனர் மீண்டும் வாதிகளால் வைக்கப்பட்டு 2002ம் ஆண்டு சமாதான கூட்டத்தின் அடிப்படையில் மீண்டும் உடைக்கப்பட்டது. நான் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் மேற்படி 1995 ம் ஆண்டு தூம்பு உடைக்கப்பட்டு மீண்டும் வாதிகளால் வைக்கப்பட்டு மீண்டும் 2002ம் ஆண்டு வருவாய் துறையினரால் சமானதான கூட்டம் நடத்தப்பட்டு மீண்டும் உடைக்கப்பட்டு விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. மேற்படி விவரங்களை எதிர்வழக்குரையில் சொல்லவில்லை என்றும் வழக்கிற்காக ஞாபகம் இல்லை என்றால் சரியல்ல.

21. நான் சொல்வதுபோல் 1995 லும் 2002லும் தூம்பு அகற்றப்படவில்லை என்றும் தற்போது வரை தாவா சொத்தில் தூம்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. வாதிகள் தாவா சொத்தில் எந்த காலத்திலும் தூம்பு வைக்கக்கூடாது என நீதிமன்றத்தில் எங்கள் தரப்பில் இருந்து உத்தரவு எதுவும் பெறப்படவில்லை என்று சொன்னால் சரிதான். தாவா சொத்தில் வாதிகள் அமைத்திருந்த தூம்பை வலுக்கட்டாயமாக அகற்ற கோரி தகராறு செய்ததால் எங்கள் மீது திருப்பாலைக்குடி காவல் நிலையத்தில் முதல் தகவல் அறிக்கை தாக்கல்

செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல 2002ம் ஆண்டு வாதிகள் தாவா சொத்தில் தூம்பு அமைப்பதற்கு முற்பட்டபோது நாங்கள் கேட்டோம் அதற்கு கிராம நிர்வாக அலுவலர் எங்கள் மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

22. அரசுக்கு பாத்தியப்பட்ட கண்மாயில் உள்ள தூம்பை அகற்ற முற்பட்டதால் தான் கிராம நிர்வாக அலுவலர் எங்கள் மீது புகார் அளித்தார் என்றால் சரியல்ல புஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதற்கு ஏன் தூம்பு வைக்கிறீர்கள் என

கேட்டதற்கு கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். வருவாய் துறையினர் வாதிகள் புஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சுவதாக அபராதம் ஏதேனும் விதித்தார்களா என்றால் அவர்கள் விதிக்கவில்லை நஞ்சை நிலங்களுக்கு பதிவலாக வாதிகள் புஞ்சை நிலங்களுக்கு பாய்ச்சி வந்ததால் அபராதம் விதித்தோம். எவ்வளவு அபராதம் விதித்தோம் என்றால் ரூ.20/- ஆகும். எங்கள் கிராமத்தில் உடையார் குடியிருப்பை தவிர எத்தனை குடும்பங்கள் வசித்து வருகிறார்கள் என்றால் 50 குடும்பங்கள் வசித்து வருகிறார்கள்.

23. தாவா சொத்தில் நாங்கள் வாதிகளை தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று சொன்னதன் அடிப்படையில் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். தாவா சொத்து வழியாக வாதிகள் தண்ணீர் பாய்ச்சுவதற்கு அவர்களுக்கு முழு உரிமை உள்ளது என்றும் அதை தடை செய்வதற்கு சட்டத்தின் அடிப்படையில் எங்களுக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. நஞ்சை நிலங்களுக்கு மட்டும் புஞ்சை நிலங்களுக்கு தண்ணீர் பாய்ச்சக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. எங்கள் கிராமத்தில் நாங்கள் பெரும்பாண்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் என்பதால் வாதிகளுக்கு கஷ்டங்களை ஏற்படுத்தி இருக்கிறோம் என்று சொன்னால் சரியல்ல.

24. வருவாய் கோட்டாட்சியரிடம் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிருரையில் வாதிகள் இடையூறு செய்கிறார்கள் என காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளோம் என கூறப்பட்டுள்ளது என்றும் அவ்வாறு கொடுக்கப்பட்ட புகாரின் மேல் மேல்நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் எடுக்கப்படவில்லை. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.2 ஆவணம் கண்மாயின் புலப்பட நகல் என்றால் சரிதான். புலப்படத்தில் சர்வே எண்.177 க்கு நேர்எதிரில் தான் தாவா சொத்து உள்ளது என்றால் சரிதான்.

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சியம் இத்துடன் ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை